கலிகமுவ பிரதேச சபை

<u>கேகாலை மாவட்டம்</u>

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 ஆம் வருடம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த 13 ஏக்கர் மற்றும் 95 பர்ச்சஸ் கொண்ட 15 காணி இடங்கள் மற்றும் நிலப் பகுதியின் பெறுமதி குறிப்பிடாத 05 காணிகள் தொடர்பாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டு மொத்தம் ரூபா. 18,993,404 ஆவதுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா. 5,919,442 ஆக இருப்பதுடன் ரூபா. 13,073,962 வேறுபாடாக இருந்தது.

1.3.3 பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் 01 வருடத்திற்கு மேலான காலங்கடந்த பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையாக ரூபா. 19,766,122 மற்றும் ரூபா.12,603,754 ஆகும்.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 வருட 15 ஆம் இலக்க பிரதேச சபைக் சட்டத்தின் பிரிவு 158(1) | 2016 திசம்பர் 31 ஆம் திகதி வரை நீண்ட காலமாக அறவிடப்படாமலும் சபையினால் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளாது இருந்த வரிப் பணம் மற்றும் ஆதன வரி மொத்தம் ரூபா. 592,863 ஆகும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 (ஈ) | கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த 08 காசோலைகளின் பெறுமதி ரூபா.8,043 தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 8,995,783 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 3,954,918 ஆக இருந்தமையால்

மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 5,040,865 அதிரிப்பைக் காண்பித்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 5,040,865 தொகை அதிகரிப்புக்கு 06 வருமான விடயங்களின் அதிகரிப்பும் 04 செலவின விடயங்களில் குறைவும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.12.31 இல் நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 673 | 440 | 2,429 | 1,329 | 237 | 381 | 618 |
| ii | வாடகை | 4 | 4 | 259 | 259 | - | - | |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 459 | 459 | - | - | - |
| iv | ஏனைய வருமானம் | 4 | 4 | 64 | 64 | - | - | - |
| | மொத்தம் | 681 | 448 | 3,211 | 2,111 | 237 | 381 | 618 |

### 2.3.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2000 ஆம் வருட 53 ம் இலக்கம் மற்றும் 1988 ஆம் வருட 56 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 ஆம் வருட 47 ஆம் இலக்கத்தினையுடைய தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதி அதி விசேட வர்த்தமான

அறிவித்தலின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்தும் 2016 நவம்பர் 03 திகதி வரையிலும் சபை அதிகார எல்லைக்குற்பட்ட 46 வியாபார நிறுவனங்களினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) கொட்டியக்கும்புர மாட்டிறைச்சிக் கடை 2014 ஆம் வருடம் டென்டர் செய்தது தொடர்பாக நிலுவைப் பணம் அறவிடுவது தொடர்பாக கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கின் படி 2016 மே மாதம் 06 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ரூபா. 525,146 நிலுவையினை அறவிட்டுக் கொள்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அந்நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பீட்டு வரிக்குரிய சொத்துக்கள் 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயிருந்தும் 2007 ஆம் வருட மதிப்பீட்டின் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு வரி அறவிடப்பட்டிருந்தது.

(இ) பௌதீக கணக்காய்வு செய்யப்பட்ட 2016 நவம்பர் மாதம் வரை சபைக்குரிய 02 வாகனம் காப்புறுதிப் பத்திரங்கள் காலாவதியாகி 01 மாதம் மற்றும் 04 மாதம் ஆகியிருந்ததுடன் 04 வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரம் காலாவதியாகி 01 மாதம் மற்றும் 03 மாதம் ஆகியிருந்தது.

(ஈ) 1999 வருடத்தில் சில்வடெரஸ் காணி கூறிடுவதன் மூலம் பிரதேச சபைக்கு பொதுத் தேவைகளுக்கு பயன்படுத்தவென வழங்கப்பட்ட லொட் இலக்கம் 30 காணியிற்கு பாதுகாப்பு மதில் அமைக்கப்பட்டிருக்கவில்லாததுடன் அதற்கு அருகில் உள்ள காணியில் வசிப்பவர்களினால் சபை காணியினை உரிமையாக்கிக் கொள்ளும் நோக்கில் மதில் அமைக்கப்பட்டிருந்தது.

3.2 விளைவற்ற / குறைவாகப்பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.

சபைக்குரிய 02 வாகனங்கள் 05 முதல் 25 வருட காலமாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அவ்வாகனங்களை பழுது பார்த்து மீண்டும் அதனைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொன்றிருக்கவில்லை.

3.5 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் போது சபை பயன்டுத்துகின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப நியமத்தினை கணக்காய்வுகு சமர்ப்பிக்கவில்லை.

(ஆ) முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் போது பொருட்கள் வழங்கும் பதிவேட்டின் படி 2015 ஆம் வருடம் மற்றும் 2016 ஆம் வருடம் முன்கலவை 93 கியூப் மற்றும் 35 படி 128 கியூப் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தும் பதிவேட்டின் படி 101 கியூப் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 27 கியூப் குறைவாகக் காணப்பட்டது.

(இ) முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் போது மணல் சேர்ப்பது முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் முன்னர் மதிப்பீடு தயாரிக்காதது, உற்பத்தி செய்யப்பட்ட முன்கலவை (பிரிமிக்ஸ்) இருப்புப் பதிவேட்டில் பதியாதது போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

3.6 திண்மக் கழிவு முகாமைத்துவம்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) சபையினால் தற்போது திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததுடன் சபையின் அதிகார எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகள் மொரொன்தொட்ட சந்தைக்குரிய நிலத்தில் குழியொன்றினுல் போடப்பட்டு வருகின்றது.

(ஆ) சாத்தியக் கூற்று ஆய்வொன்றை மேற்கொள்ளாது திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மொரொன்தொட்ட ஹால்மெஸ்ஸ லுனுகல வத்த காணிக்கு உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் பாலம் நிர்மானிப்பதற்காக ரூபா.23,970,000 செலவு செய்ய வேண்டியிருப்பதுடன் அவ்வாறான நிதிப் பெறுமதி சபையில் காணப்படாததுடன் வேறு நிறுவனங்களின் ஒதுக்கீடு

பெற்றுக் கொள்ளாது காணி கொள்வனவு செய்தது மற்ற செலவுகளுக்காக இது வரை செலவு செய்யப்பட்ட ரூபா. 4,286,322 விளைவற்றதாக காணப்படுகின்றது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமாப்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 08 தொடர்பாக மொத்தம் ரூபா. 414,500 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 09 தொடர்பாக ஒதிக்கீடு நூற்றுக்கு 46 இருந்து 97 வரை நூற்று வீதத்திற்கு சமமாக ரூபா. 1,075,016 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

### 4.2 உள்ளக கணக்காய்வு

1988 பிரதேச சபை ( நிதி மற்றும் நிர்வாக) விதி 5(7) பிரிவின் படி நிதி மற்றும் இருப்பு தொடர்பாக போதுமான உள்ளகக் கணக்காய்வுவொன்று நடாத்திச் செல்லப்படவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|
| (அ) சொத்துக் கட்டுப்பாடு | (i) இயந்திரம் மற்றும் வாகன சரியான முறையில் பயன்படுத்தபடவில்லை.<br>(ii) இருப்புப் பதிவேடு நடாத்திச் செல்லப்படவில்லை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் பரிசேதனை | (i) உள்ளக கணக்காய்வு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படடிருக்கவில்லை.<br>(ii) சபையின் ஊழியர்களது வருகை மற்றும் வெயிச் செல்வது சரியபன முறையில் பதிவு செய்யப்பாட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) | வருடத்தின் இறுதியில் சரியான பொறுமதியினை கவனத்திற் கொண்டு கடன்பட்டோர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நீதிமன்ற அபராதம், முத்தரைக் கட்டணம் மற்றும் வேலைகளுக்கான நன்கொடையின் சரியான பொறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) வருமான நிர்வாகம் | (i) | விளம்பரப் பதாகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பாரிய சூழல் பாதிப்பிற்குரிய தொலைத் தொடர்புக் கம்ப வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு சரியான முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நீண்ட காலமாக தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதி காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) | நி.பி.396 (இ) கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா. 39,617 பொறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |